1973 பிப்ரவரி 7]

ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுப்பதற்கு இந்த அரசு ரயில்வே இலாகாவைக் கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : லாண்டு அக்விசிஷனுக்கு இப்பொழுது necessary staff has been sanctioned to attend to the work of land acquisition. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே நில ஆர்ஜிதம் செய்வதற்கு எந்த வழிவகைகளை நாம் கடைப்பிடிக்கிறோமோ அதே வழிவகைகளைத் தான் நாம் கடைப்பிடிக்க முடியுமே தவிர, இதற்காக தனிப்பட்ட முறையில் சலுகைகள் கேட்பதற்கு இடமில்லை.

கும்பகோணத்தில் புதிய இரயில்வே மேம்பாலம்

*** 53 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி எப்போது துவங்கப்படவிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒப்பந்த புள்ளிகள் முடிவாகி வேலை துரித நிலையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : கும்பகோணத்தில் அமைக்கப்பட்டு வருகிற ரயில்வே பாலத்திற்கு உள்ள எஸ்டிமேட் தொகை எவ்வளவு என்பதனையும், அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்பதனையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 15 லட்சத்திற்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. டெக்னிகல் சாங்ஷன் ரூ. 14,50,000-க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த வேலைகளுக்கு 9—2—1972-ல் காண்டிராக்ட் ஒப்படைக்கப்பட்டு, அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் நடைபெறுவதிலே ரயில்வே இலாகாவில் சில பிரச்னைகள் இருந்தன. அந்தப் பிரச்னைகளை நம்முடைய தலைமைப் பொறியாளர் தலையிட்டு, முடித்துவைத்து, இப்பொழுது வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.